

TAMIL

# COVID-19 தடுப்பூசிகள்: அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**தகவலறிந்து முடிவு** ஒன்றை எடுப்பதற்கு உதவும் **துல்லியமான மருத்துவத் தகவல்களை** வழங்குவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும். இதை மருத்துவர்கள் ஆய்வு செய்துள்ளனர். மார்ச் 2021 நிலைமைப்படி இவை மிகவும் அண்மித்த தகவல்கள், மேலும் இவை தேவைக்கேற்ப புதுப்பிக்கப்படும்.

---

### வேறு நிறத்தவர்களில் அல்லது பிற சிறுபான்மைக் குழுவினரில் இந்தத் தடுப்பூசிகள் பரிசோதிக்கப்பட்டனவா?

ஆய்வுகள் **20-38%% வேறு நிறத்தவர்கள் மற்றும் பிற சிறுபான்மைக் குழுவினரில் நடத்தப்பட்டன.**

### Sஎனக்கு லேசான பக்க விளைவுகள் ஏற்பட்டிருந்தாலும் கூடத் தடுப்பூசியின் இரண்டாவது ஊசியைப் போட வேண்டுமா?

ஆம்! அனேகமானோருக்கு லேசான பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. முழுமையான பாதுகாப்பிற்கு உங்களுக்கு இரண்டு ஊசிகள் தேவை **- ஒரு டோஸ் உங்களுக்குப் போதுமான பாதுகாப்பை அளிக்காது.** உங்களுக்கு ஒரு மோசமான எதிர்விளைவு ஏற்பட்டிருந்தால், அதைப் பற்றி ஒரு மருத்துவ நிபுணரிடம் பேசுவது நல்லது.

### எனக்கு மோசமான ஒவ்வாமை உள்ளது, நான் தடுப்பூசி பெற வேண்டுமா?

தடுப்பூசியில் உள்ள மூலப்பொருட்களுக்கு உங்களுக்கு ஒவ்வாமை இருந்தால் அல்லது இதற்கு முன்பு மற்றொரு தடுப்பூசிக்கு மோசமான எதிர்வினை ஏற்பட்டிருந்தால், நீங்கள் தடுப்பூசி பெறக்கூடாது. பிற பொருட்களுக்கான (உணவு, மருந்துகள்) மோசமான ஒவ்வாமை உங்களுக்கு இருந்தால், **ஒரு மருத்துவ நிபுணரிடம் பேசவும்.**

### தடுப்பூசி எம்முறையில் வழங்கப்படுகின்றது அத்துடன் தடுப்பூசி முதலில் யாருக்குக் கிடைக்கும்?

தடுப்பூசி வழங்கும்-முறையின் வெவ்வேறு கட்டங்களைக் கையாளும் ஒரு குழு ( “பணிக்குழு” ) எம்மிடம் உள்ளது. COVID-19 இனால் மிக அதிகமாக நோயேற்படக்கூடியவர்களுக்கு முதலில் தடுப்பூசி கிடைக்கும். சுகாதாரப் பணியாளர்கள், நீண்ட-காலப் பராமரிப்பு இல்லங்களில் உள்ளவர்கள் போன்றோர். அடுத்த கட்டத்தில் உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்களும் வயதானவர்களும் உள்ளனர். **மூன்றாம் கட்டத்தில், தடுப்பூசி பெற விரும்பும் அனைத்து மக்களும் ஒன்றைப் பெற முடியும்.**

### இந்தத் தடுப்பூசிகள் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு செயற்படுமா?

Pfizer-BioNTech மற்றும் Moderna தடுப்பூசிகள் இரண்டும் இளம் வயதினருக்கு வழங்கியது போன்ற அதே பாதுகாப்பை 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் காட்டின: **Pfizer-BioNTech 95% நோயெதிர்ப்பு சக்தியை வழங்கிய அதே நேரத்தில் Moderna 86% நோயெதிர்ப்பு சக்தியை 65 வயதுக்கு மேற்பட்ட நோயாளிகளுக்குக் கொடுத்திருந்தது.**

### தடுப்பூசி போடுவதனால் எனக்கு COVID-19 ஏற்படுமா?

தடுப்பூசிகள் “உயிர்” அற்றவை – அவற்றில் எந்த வைரஸும் இல்லை என்பதே இதன் பொருள். என**வே அவை உங்கள் உடலில் எந்தத் தொற்றுநோயையும் ஏற்படுத்தாது.**

sherbourne HEALTH

REGENT PARK COMMUNITY HEALTH CENTRE

LOFT

CITY PARK CO-OPERATIVE APARTMENTS INC.



TAMIL

# COVID-19 தடுப்பூசிகள்: அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**தகவலறிந்து முடிவு ஒன்றை** எடுப்பதற்கு உதவும் **துல்லியமான மருத்துவத் தகவல்களை** வழங்குவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும். இதை மருத்துவர்கள் ஆய்வு செய்துள்ளனர். மார்ச் 2021 நிலைமைப்படி இவை மிகவும் அண்மித்த தகவல்கள், மேலும் இவை தேவைக்கேற்ப புதுப்பிக்கப்படும்.

---

## எனது தடுப்பூசியைப் பெற்ற பின்னரும் கூட நான் முகக்கவசம் அணிய வேண்டுமா? ஏன்?

**ஆம.** தடுப்பூசி பெற்ற பின்னரும் கூட COVID-19 இனால் உங்களுக்கு நோயேற்படவும் அத்துடன் பின்னர் மற்றவர்களுக்கு COVID-19 தொற்றை ஏற்படுத்தவும் ஒரு சிறிதளவு வாய்ப்பு உள்ளது. **தடுப்பூசி பெற்ற பின்னரும் கூட நீங்கள் தொடர்ந்து முகக்கவசம் அணிவதுடன் சமூக இடைவெளி தூரத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.**

## பக்க விளைவுகள் குறித்து ஏராளமான தகவல்கள் எம்மிடம் உள்ளதா?

மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் **சில தீவிர பக்க விளைவுகளைக் கொண்டிருந்தாலும்** நல்ல முடிவுகளையேக் காட்டுகின்றன. பெரும்பாலான பக்க விளைவுகள் தடுப்பூசி பெற்ற 2-3 நாட்களுக்கு இடையில் ஏற்பட்டு 6 வாரங்கள் வரைத் தொடர்கின்ற. **ஆய்வுகள் செய்யப்பட்டபோது , மக்கள் தடுப்பூசிகளைப் பெற்ற பின்னர் 2 மாதங்கள் வரை அவர்களைச் சோதித்தனர்.**

## நீண்ட-காலப் பக்க விளைவுகள் பற்றி என்ன அறியலாம்?

தமது தடுப்பூசிகளைப் பெறுபவர்களுக்கு வேறு எந்தவிதப் பக்க விளைவுகளும் ஏற்படவில்லை என்பதை இப்போதும் கூட, கனடா சுகாதார அமைப்பு உறுதிசெய்து கொண்டிருக்கின்றது. **ஒரு புதிய பக்க விளைவு ஏற்பட்டால், அது மிகவும் அரிதாக இருக்கும், மேலும் அதிக கவலைக்குரியதாக இருக்க மாட்டாது.**

## “சமூக நோயெதிர்ப்பு சக்தி” என்றால் என்ன, அது எவ்வாறு செயற்படுகின்றது?

சமூக நோயெதிர்ப்பு சக்தி என்பது **மக்கள் வைரஸிலிருந்து மறைமுகமாகப் பாதுகாக்கப்படுவதாகும்**. எம்மால் முடிந்தவரைத் தடுப்பூசி போடுவதன் மூலம், தடுப்பூசி போடப்படாத மற்றவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படாமலும், அதன் மூலம் நோயேற்படாமலும் இருப்பதனை உறுதிசெய்கின்றோம். **70-80% மக்களுக்கு நோயெதிர்ப்பினை ஏற்படுத்துவது**

## WhatsApp, Facebook மற்றும் பிற சமூக ஊடகங்களில் ஏராளமான தகவல்கள் உள்ளனஎது சரி என்று எப்படி நான் அறிந்து கொள்ளலாம்?

உங்கள் **குடும்ப மருத்துவர் அல்லது மருத்துவத் தாதி** போன்ற நம்பகமான ஆதாரங்களிலிருந்து அல்லது **பொது சுகாதார வலைத்தளங்களிலிருந்து** இணையத்தில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும (கீழேயுள்ள இணைப்புகளைப் பார்க்கவும்)

## எவ்வளவு காலத்துக்கு நான் பாதுகாக்கப்படுவேன்?

ஒரு தடுப்பூசிக்குப் பின்னர், எவ்வளவு காலத்துக்கு நீங்கள் பாதுகாக்கப்படுவீர்கள் என்பது இந்நேரத்தில் எங்களுக்குத் தெரியாது.

உங்களுக்கு மேலதிகமான கேள்விகள் இருந்தால், உங்களுக்கு அதிக ஆதாரங்களையும் தகவல்களையும் வழங்கக்கூடிய மருத்துவ நிபுணர் ஒருவருடன் பேசலாம். **பின்வரும் பொது சுகாதார வலைத்தளங்களையும் நீங்கள் பார்வையிடலாம்:**

1. https://covid-19.ontario.ca/covid-19-vaccines-ontario
2. https://www.canada.ca/en/public-health/services/diseases/coronavirus-disease-covid-19/vaccines.html

sherbourne HEALTH

REGENT PARK

LOFT

CITY PARK